# சுற்றுச்சூழலில் மாற்றம் ஏற்படுத்த விழையும் சோனாலி மணிமாறன்

எந்த நிறுவனமாக இருந்தாலும் வருமானம் ஈட்டுவதற்கு மேல், அது ஏற்படுத்தும் சமூக மற்றும் சுற்றுப்புற தாக்கங்களை கவனத்தில் கொண்டால் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்கிறார் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழக சுற்றுச்சூழல், பூமி சார்ந்த அறிவியல் துறையில் பட்டம் பெற்ற சோனாலி மணிமாறன், 24.

வருங்காலத்தில் தாம் செய்யும் பணி, சமூகத்தில் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்த உதவியாக இருக்கவேண்டும் என்ற உறுதியுடன் இருக்கும் சோனாலி, தொடக்கக்கல்லூரிக்குப் பிறகு ஓராண்டு இடைவெளி எடுத்துக் கொண்டு சட்டத் துறையில் வேலை பயிற்சிக்கு சேர்ந்தார். ஆனால், அந்தத் துறையில் தமக்கு அவ்வளவாக ஆர்வம் இல்லை என்பதை உணர்ந்த அவரை நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் வழங்கிய சுற்றுச்சூழல், பூமி சார்ந்த அறிவியல் (Environmental Earth Systems Science) என்ற பட்டப் படிப்பு ஈர்த்தது.

கடந்த சில ஆண்டுகளாக உலக வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு ஆகிய சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க உலகமெங்கும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறு வயதிலிருந்தே இயற்கை மீதான ஆர்வத்துடன் வளர்ந்த சோனாலி, "அடுத்த தலைமுறையினருக்கு சுற்றுச்சூழலைப் பற்றி கற்றுக்கொடுக்க வேண்டும். ஒரு மாற்றத்தை சிறந்த முறையில் ஏற்படுத்த அது சார்ந்த கல்வியே நல்ல வழி.

"நாம் நகர்ப்புறத்தில் வாழ்வதால் நாம் இயற்கைக்கு ஏற்படுத்தும் பாதிப்புகளை நேரடியாக உணரவோ அறியவோ முடியாமல் போகிறது. இருந்தாலும் இயற்கை என்பது மனிதர்களுக்கும் பூமிக்கும் எவ்வளவு முக்கியம் என்பதையும் நமது செயல்களும் வாழ்க்கை முறைகளும் அதை அவ்விதத்தில் பாதிக்கலாம் என்பதையும் தெரிந்துகொள்வது அவசியம்," என்கிறார் சோனாலி.

எதிர்காலத்தில் இந்தத் துறையில் பேராசிரியராக, மாணவர்களுக்கு பூமியைப் பற்றி கற்றுக் கொடுக்கவேண்டும் என்ற ஆசையுடன் இருக்கும் இவர் பல்கலைக் கழகக் கல்வியின்போது செய்த பூமி சார்ந்த ஆராய்ச்சிக்கு URECA ஆய்வு உன்னத விருது கிடைத்தது.

"சிங்கப்பூர் அரசாங்கம் பசுமைத் திட்டம் 2021 போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தினாலும் மக்கள் அதற்கு இணங்க தங்களது பழக்க வழக்கங்களையும் மாற்றி சுற்றுச்சூழலுக்கு தங்களால் இயன்ற நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முயல வேண்டும் என்றார்.

இந்தோனீசியா, ஸ்ரீலங்கா போன்ற பிற நாடுகளில் உள்ள எரிமலைகள், பவளப் பாறைகள், பனைத் தோட்டங்கள் ஆகியவற்றை நேரில் பார்த்த அனுபவங்கள் தனது கல்விப் பயணத்தின் முக்கிய கட்டங்கள் என்றார் சோனாலி.

தற்போது ஒரு 'நிதி-தொழில்நுட்ப' நிறுவனத்தில் வேலை செய்யும் சோனாலி, சுற்றுச்சூழல் திட்டங்களுக்கான நிதியை திரட்ட வழிசெய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்.



சிங்கப்பூரில் மில்லியன் ஆண்டுகளுக்கு மேலான வரலாறு கொண்ட புக்கிட் தீமா, பால் பண்ணை, குவாரி பகுதிகள் உள்ளன என்று கூறும் சொனாலி, சிங்கப்பூரின் முதல் வெப்பமண்டல சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளுக்கான மதிப்பீட்டை நடத்தியது மறக்க முடியாத அனுபவம் என்கிறார்.

செய்தி: இந்து இளங்கோவன்,